பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.50

சுடர்: 6 பிரசோற்பத்தி ஹூ சித்திரை மீ 06 உ. வெள்ளிக்கிழமை [19-04-1991] UTHAYAN—A Lively National Tamil Daily கதிர்: 136

# கொத்தணிகளைக் கலைக்க பணிப்பாளருக்கு அதிகாரம்!

## வட்டாரக் கல்வி அதிகாரிகளையும் தேவைப்பட்டால் அவர் நியமிக்கலாம்

கொழும்பு, ஏப்ரல் 19

மாவட்டக் கல்விப் பணிப்பாளர்கள் தேவைப்பட்டால் தமது மாவட்டத்தில் உள்ள ஏதேனும் பாடசாலை கொத்தணியைக் கலைத்து, அந்தக் கொத்தணிக்குப் பதிலாக கல்வி வட்டாரங்களை மீண்டும் ஸ்தாபிக்க முடியும்.

இதற்கான அதிகாரம் மாவட்ட கல்விப் பணிப்பாளர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

கல்விப் பணிப்பாளர்களுக்கு இத்தகைய அதிகாரம் வழங்கப்பட்டிருப்பது குறித்து, அண்மையில் கொழும்பில் நடைபெற்ற கல்வி உயரதிகாரிகள் மாநாட்டில் வைத்து கல்வி அமைச்சர் திரு லலித் அத்துலத் முதலி அறிவித்ததாகவும் அறியவருகிறது.

கல்வித் திணைக்கள சம்பந்தமான சுற்று நிருபங்களை மத்திய அரசின் கல்வி அமைச்சு மட்டுமே வெளியிட முடியும் என்றும் —

அவை சகலருக்கும் தெரியக் கூடியதாக பத்திரிகைகள் மூலம் பகிரங்கப்படுத்தப்பட வேண்டும் என்றும் அமைச்சர் இந்த மாநாட்டில் வைத்து அறிவித்தார்.

"கொத்தணி பாடசாலை அமைப்பு முறை விரைவில் ஒழிக்கப்படும்''—என்று கல்வி அமைச்சர் லலித் அத்துலத் முதலியை மேற்கோள் காட்டி கடந்த 01-04-91 உதயனில் செய்தி வெளியாகியிருந்தது தெரிந்ததே. [உ]

## அன்னை பூபதி நினைவு தினம்

யாழ்ப்பாணம், ஏப். 19

உண்ணா நோன்பிருந்து உயிர் நீத்த அன்னை பூபதியின் மூன்றாவது ஆண்டு நினைவு தினம் இன்று தமிழீழமெங்கும் அனுஷ்டிக்கப்படுகிறது.

இதனையொட்டி பல இடங்களிலும் அஞ்சலிக் கூட்டங்கள், நினைவு தின நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

யாழ். நகரப் பகுதியில் அலங்காரப் பந்தல்கள் பல அமைக்கப்பட்டுள்ளன. [ஒ-15-05]

## குண்டு வீச்சு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 19

மன்னார், பண்டிவிரிச்சான் பகுதியிலும் நேற்று முன்தினம் விமானத் தாக்குதல்கள் இடம்பெற்றன என்று அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

குண்டு வீச்சினால் வீடுகள் பல பெருமளவு சேதமடைந்தன என்று தெரிவிக்கப்பட்டது.

இப்பகுதியில் இருந்து மக்கள் இடம்பெயர்ந்துவிட்டதால், உயிரிழப்புகள் தவிர்க்கப்பட்டன. [ஒ-15]

### இலங்கையும் இந்தியாவும்

## புதிய ஒப்பந்தம் செய்ய கோருகிறது அ. தி. மு. க.

சென்னை, ஏப். 19

இலங்கைத் தமிழர்களின் இன்னல்களைத் தீர்க்க புதிய, கௌரவமான, இந்திய - இலங்கை ஒப்பந்தம் ஒன்று இன்றியமையாததாகி விட்டது.

அ. தி. மு. க.வின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

அ. தி. மு. க. பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா நேற்று தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டார்.

ஈழப் போராளிகள் தமிழக மண்ணைத் தளமாகப் பயன்படுத்த அனுமதிக்கப்படமாட்டாது என்றும் அதில் கூறப்

[6 ஆம் பக்கம் பார்க்க]

### தமிழீழம் பற்றிய

## சர்வசன வாக்கெடுப்பை அரசு விரும்பவில்லையாம்

வடக்கு - கிழக்கு தமிழ் மக்கள் தமிழீழத்தை விரும்புகின்றனரா?

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை தங்கள் பிரதிநிதிகளாக அவர்கள் ஏற்கிறார்களா?

இவற்றைக் கண்டறிய வேண்டுமானால் சர்வசன வாக்கெடுப்பு ஒன்றை நடத்தும்படி விடுதலைப் புலிகள் இயக்கம் தெரிவித்த கருத்தை இலங்கை அரசு பெரும்பாலும் நிராகரித்து விட்டதாக அறிவிக்கப்படுகிறது.

அவ்வாறு ஒரு சர்வசன வாக்கெடுப்பை நடத்த அரசு விரும்பவில்லை என்று கொழும்பு அரசு அதிகாரிகளை ஆதாரங்காட்டி செய்தி ஏஜென்சி ஒன்று தகவலை வெளியிட்டது. [அ-எ]

## மன்னாரில் தொடர்ந்து மோதல்! குண்டு வீச்சு!!

யாழ்ப்பாணம், ஏப், 19

மன்னார் பரப்புக்கடந்தான், நானாட்டான் பகுதிகளில் தொடர்ந்து விமானத் தாக்குதல்களும் கடும் மோதல் சம்பவங்களும் இடம்பெற்று வருவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த செவ்வாயன்று காலை ஆட்காட்டிவெளியிலிருந்து பரப்புக்கடந்தான் நோக்கி முன்னேறிய படையினர் மீது இரண்டு இடங்களுக்கும் இடையில் வைத்து விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர்.

இதனையடுத்து அப்பகுதியில் கடும் சண்டையுண்டது.

[6 ஆம் பக்கம் பார்க்க]

## ஹெலித் தாக்கு

யாழ்ப்பாணம், ஏப். 19

புன்னாலைக்கட்டுவன் பகுதியில் நேற்று மாலை ஹெலித் தாக்குதல் நடத்தியது.

அதேசமயம் பலாலியில் இருந்து இப்பகுதியை நோக்கி ஷெல் தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டது. [ஒ-15]

## உத்தரவு

தமிழகத்தில் நடைபெறும் தேர்தல்களின்போது எந்தக் கட்சிக்கும் ஆதரவாக பிரசாரம் செய்யக் கூடாது என்று தமிழகத்தில் உள்ள ஈழத்தமிழ் அகதிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. [உ]

## திருமலை பகுதியில் 4 படையினர் பலி!

கொழும்பு, ஏப். 19

திருகோணமலை மாவட்டத்தில் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் நான்கு படையினர் கொல்லப்பட்டனர் என்று கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

படையினர் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த சமயம் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. [ஒ எ]

## பொது மக்கள் பலர் பலி?

மன்னார் மாவட்டத்தில் இடம்பெற்று வரும் இராணுவ நடவடிக்கைகளில் சிக்கி பெரும் எண்ணிக்கையான பொது மக்கள் உயிரிழந்திருக்கலாம் என்று பி. பி. ஸி. அச்சம் தெரிவித்தது.

சண்டை நடக்கும் முருங்கன் பகுதியில் சுமார் ஆயிரம் பேர் சிக்குண்டு இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது [உ-5]

## 2 இடங்களில் போட்டியிட செல்வி ஜெயலலிதா முடிவு!

சென்னை, ஏப். 19

அ. தி. மு. க. பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா, எதிர்வரும் தமிழக சட்டசபைத் தேர்தலில் இரண்டு தொகுதிகளில் போட்டியிடுவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தர்மபுரி மாவட்டத்தில் உள்ள வரகுரு தொகுதியில் இருந்தும் செல்வி ஜெயலலிதா போட்டியிடுவார் என்று நேற்று அறிவிக்கப்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## மடு அகதி முகாமில் உணவுப் பற்றாக்குறை

லண்டன், ஏப். 19

இருபத்தைந்து ஆயிரத்துக்கும் அதிகமான தமிழர் தங்கியிருக்கும் மடு அகதி முகாமில் பெரும் உணவு மற்றும் மருந்துத் தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதாக பி. பி. ஸி. நேற்றிரவு தெரிவித்தது.

ஐ. நா. அகதிகள் தாதரகத்தினால் பராமரிக்கப்பட்டு வரும் இந்த அகதிமுகாமுக்கு அண்மையில் உள்ள பகுதிகளில் கடும் சண்டை நடைபெற்று வருவதால் அங்கு உணவு, மருந்துகளை எடுத்துச் செல்வது [illegible]ருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. [உ-5]

## முச்சந்தி முரளி



[illegible] போலை......!

## பலாலியில் இருந்து நேற்று ஷெல் வீச்சு!

யாழ்ப்பாணம், ஏப். 19

பலாலி முகாமில் இருந்து நேற்று நண்பகல் 12 மணிக்குப் பின்னர் தொடர்ச்சியாக ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது.

வளலாய்ப் பகுதியில் பல ஷெல்கள் விழுந்து வெடித்தன.

கல்லக்கதிர் சனசமூக நிலையத்துக்குப் பின்புறமாக விழுந்த ஷெல்லினால் ஒருவர் காயமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

வளலாய்ப் பகுதியில் சில வீடுகள் சேதமடைந்தன. [ஒ-15]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## NEW SCIENCE ACADEMY
JAFFNA.

PHYSICS
BY
Mr. சோதிலிங்கம் B. Sc.

91 A/L

PAPER CLASS

Sat., Sun. — 6-15 — 7-15

ஆரம்பம்:- 20 - 04 - 1991

Sat. 6-15 a. m.

ELECTRICITY

ஆரம்பமாகி விட்டது.

Sat., Sun. — 12-30 — 1-30

[சி-5111]



## NEW SCIENCE ACADEMY
Front of Elilakam - Jaffna.

PHYSICS
By
Mr. நந்தகுமார் B. Sc.

91 A/L
PAPER CLASS

Sat., Sun. 12-15 — 2-15

MECHANICS, LIGHT

ஆரம்பம்: 20 - 04 - 1991

Sat. 12-15

92 A/L

MECHANICS Sat., Sun. 2-00 — 3-00
HEAT Sat., Sun. 3-00 — 4-00

ஆரம்பம்: 20 - 04 - 1991

Sat. 2-00 p. m.

DAY CLASS

ஆரம்பமாகிவிட்டது.

THE., WED., THU. 12-15 — 2-15

Properties of Matter & Sound

[சி-5112]


## 6 ஆம் மாத நினைவஞ்சலி



வீரஜனனம்: 31 — 03 — 1973

வீர மரணம்: 23 — 11 — 1990

"கப்டன் ரஷாத்"

### சிவசுப்பிரமணியம் சுரேஸ்குமார்

[கிளி/ இந்து ம. வி. மாணவ தலைவன்]

இங்கள வெறியர் சிதைந்தோட
வெங்கள மாடிய வீரவேங்கை
எங்களின் அன்புச் சின்னம் சுரேஷ்
மாங்குளப் போரில் மடிந்தனை - உனது
வீரவாழ்வு ஈழப்போரின்
இனிய காலடித் தடங்களில் தொடரும்
உன் பிரிவால் தினமும் துயரடைகின்றோம்.

அன்பு அம்மா, அண்ணன்மார்,
உறவினர்கள், நண்பர்கள்.

கணேசபுரம்,
கிளிநொச்சி.

[16450]

## தங்கச் சங்கிலி யாருடையது?

யாழ்ப்பாணம், ஏப். 19

யாழ். கோட்டைப் பகுதியில் தங்கச் சங்கிலி ஒன்று கண்டெடுக்கப்பட்டு கோண்டாவிலிலுள்ள விடுதலைப் புலிகள் மாவட்டச் செயலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர்கள் தகுந்த அத்தாட்சிகளைச் சமர்ப்பித்து அதனைப் பெற்றுக்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. [இ]

## ஒப்பந்தம்

பக்தாத், ஏப். 19

குர்திஷ் அகதிகளுக்கு உதவுவது தொடர்பாக ஈராக்கும் ஐ. நாவும் நேற்று உடன்பாடு ஒன்றைச் செய்து கொண்டன.

## ஊரடங்கு

கொழும்பு ஏப். 19

மன்னார் மற்றும் கிளிநொச்சி நிர்வாக மாவட்டங்களில் ஊரடங்குச் சட்டம் தொடர்ந்தும் அமுல் நடத்தப்பட்டு வருவதாக பாதுகாப்பு அமைச்சு நேற்று அறிவித்தது. [ஓ-எ]

## வாகனம் மீது ஹெலி சூடு

தென்மராட்சி, ஏப். 19

நேற்று முன்தினம் இரவு 7-15 மணியளவில் தேங்காய் ஏற்றிவந்த வாகனம் ஒன்றின் மீது சங்கத்தானைப் பகுதியில் வைத்து ஹெலியிலிருந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

வாகனத்தின் கண்ணாடிகள் சேதமடைந்தன. வாகனத்திலிருந்தோர் பாய்ந்து தப்பிக் கொண்டனர். சில வீடுகளின் கூரை ஓடுகளும் சேதமடைந்தன. [ஒ-117]

## தாளையடியில் கடற்படை கப்பல்!

தாளையடி, ஏப். 19

வடமராட்சி கிழக்கில் தாளையடிக் கடற் பகுதியில் பெரிய கடற்படைக் கப்பல் ஒன்று நேற்று முன்தினம் பிற்பகல் தொடக்கம் நங்கூரமிட்டுள்ளது.

அதேவேளை இரவு நேரத்தில் ஸ்ரீலங்கா கடற்படையின் விசைப்படகுகளின் ரோந்தும் அதிகரித்துள்ளது. [ஒ-144]

## அஞ்சலி கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 19

"கடந்த மாதம் மன்னார் மாவட்டம் சிலாவத்துறை இராணுவ முகாம் தகர்ப்பில் வீரமரணமடைந்த லெப்டினன்ட் காஸ்ரோ மற்றும் ஏனைய வேங்கைகளை நினைவு கூருமுகமாக அஞ்சலிக் கூட்டமொன்று நாளை சனிக்கிழமை பிற்பகல் 4 30 மணிக்கு யாழ் மணிக்கூண்டு வீதியில் அமைந்துள்ள ரங்க ரஞ்சன சபா மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. [உ-5]

## ஹெலித் தாக்கு நடந்தபோது விபத்து!

தென்மராட்சி, ஏப். 19

நேற்று முன்தினம் இரவு கோரதீவில் இடம்பெற்ற ஹெலித் தாக்குதலின் போது வானும் சைக்கிளும் மோதிக் கொண்டன.

சைக்கிளோட்டி தலையில் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்.

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த அல்பிரட் [வயது 47] என்பவரே காயமடைந்தவராவார். இவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டார். [ஒ-117]

## ஆனையிறவு இராணுவம் ஆட்லறி ஷெல் தாக்குதல்

தென்மராட்சி, ஏப். 19

ஆனையிறவு இராணுவ முகாமிலிருந்து நேற்று முன்தினம் இரவு ஏழு மணி தொடக்கம் அதிகாலை வரை தொடர்ச்சியாக ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

ஆட்லறி ஷெல்கள் பளை, பெரியபளை, ஆனைவிழுந்தான் வயல் ஆகிய இடங்களில் விழுந்து வெடித்தன.

நேற்றுக் காலையும் இப்பகுதியை நோக்கி ஷெல் வீச்சு மேற் கொள்ளப்பட்டது. [ஒ-117]

## ஓராண்டு நினைவஞ்சலி



மலர்வு: 27 - 10 - 1953

உதிர்வு: 30 - 04 - 1990

திதி: 19 - 04 - 1991

மட்டுவில் தெற்கு

### சுப்பிரமணியம் கணேசலிங்கம்

(B. A. Hons)

[நன்நடத்தை அதிகாரி, வவுனியா]

எங்கள் அன்புத் தெய்வமே!
பெற்றவள் பதைபதைக்க
பத்தினியாள் துடிதுடிக்க
ஆறாத்துயரில் எமை ஆழ்த்தி
மீளாத் துயில் கொள்ளச் சென்றதேனோ?
கழிந்துவிட்டது ஓராண்டெனினும்
மறையவில்லை உங்கள் நினைவு
நிஜமாய் மரணிக்காமல்
நிதமும் நாம் மரணிக்கின்றோம்
எம் துயரம் உங்கள் செவி ஏறாதா?
எம் கண்ணீரும் ஒருநாள் கரைதான் காணாதா?

உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:

அன்பு மனைவி, பெற்றோர்,
மாமா, மாமி,
சகோதரர், சகோதரிகள்,
மைத்துனர்கள், மைத்துனிகள்,
மருமக்கள், பெறாமக்கள்.

"கமல பவனம்"
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

[4017]

## மரண அறிவித்தல்

### திரு. வேலுப்பிள்ளை சின்னத்துரை

[கண்டாக்கர்]

மானிப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் சாவகச்சேரியை வசிப்பிடமாகக் கொண்டவருமான இளைப்பாறிய புகையிரதப் பகுதி முகாரி [F. P. L] யும் ஆன வேலுப்பிள்ளை சின்னத்துரை 18 - 4 - 1991 இல் காலமானார்.

இவர் மீனாம்பிகையின் அன்புக் கணவரும், திரு ஞானசோதி [இளைப்பாறிய லிகிதர் - தொலைத் தொடர்பு திணைக்களம்], சிவானந்தன் [இளைப்பாறிய தொழில்நுட்ப உத்தியோகஸ்தர் - பெருந்தெருக்கள் திணைக்களம்], சிவராசா [இளைப்பாறிய இ. போ. ச பரிசோதகர் - கோண்டாவில்], திருமதி சிவகுமாரி, திருமதி சிவதேவி [ஆசிரியை, றோ. க த. வித்தியாலயம், மிருசுவில்], சிவபாலன் [இறுதியாண்டு யாழ். மருத்துவபீடம்] ஆகியோரின் அன்புத் தந்தையும், பத்மினி, கமலாதேவி [ஓய்வுபெற்ற ஆசிரியை, டிறிபேக் கல்லூரி], கிருஷ்ணவேணி, லோகேஸ்வரன் [இளைப்பாறிய மின் அத்தியட்சகர், இலங்கை மின்சாரசபை], மகாசிவம் [பொறியியலாளர், கண்டி], தேவகி ஆகியோரின் அன்பு மாமனாரும், கவிதா, காவேரி, கஜேந்திரன், சசிகரன், சிறீரங்கன், சிவதர்சனா, சேந்தன், லக்ஷ்மன், நமணன், கோகுலன், சர்மிளா, மாதங்கி ஆகியோரின் பாட்டனாரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 19 - 4 - 1991 இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சி. சிவராசா

அம்பிகை வாசா,
ஆஸ்பத்திரி வீதி,
சாவகச்சேரி.

[16467]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிவித்தல்

அண்மையில் பிரான்சில் இருந்து வந்தவர் யாழ்: 85, மானிப்பாய் வீதி. துர்க்கா டிரேடர்ஸ் சுப்பையா வைச் சந்திக்க விரும்பியவர் 32, 2ஆம் குறுக்குத் தெரு, நாவாந்துறை வடக்கு, யாழ்ப்பாணத்தில் சந்திக்கவும்.

தகவல்:
சுப்பையா.

[4023]



## கலை, வர்த்தகக் கல்லூரி
## C. C. A.

மணிக்கூண்டு வீதி, யாழ்ப்பாணம்.

## A/L 92

புதிய பிரிவு

பொருளியல் — திரு. வரதராஜன்
இந்துநாகரிகம் — திரு. ஜோதீஸ்வரன்
வர்த்தகம் — திரு. ரட்ணம்
கணக்கியல் — திரு. ஸ்ரீ
தமிழ் — திரு. குழந்தை
அளவையியல் — திரு S. S. மனோகரன்

ஆரம்பம்: 20 - 04 - 1991
சனிக்கிழமை 9-00 a. m. [C/4838]



## இன்று ஆரம்பம்!

## NEW SCIENCE ACADEMY

Front of Elilakam, Jaffna.

## 91 A/L DAY CLASS

PURE / APPLIED
MATHS
By
Mr. சந்திரமோகன்

PURE
★ வரிசை மாற்றமும், சேர்மானமும் ★
★ தளக் கேத்திரகணிதம் ★
★ தொகையீடு ★

APPLIED
★ வட்ட இயக்கம் ★
★ நீர் நிலையியல் ★
★ சாவி குற்று, குறுக்குப் பெருக்கமும் ★

Mon., Fri. 10-00 — 1-00

ஆரம்பம்: 19 - 04 - 1991
Fri. 10-00 a.m.

குறிப்பு: விடுமுறை நாட்களுக்குள் இப்பகுதிகள் முடிக்கப்படும். [இ-5110]



யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

## ★ நூற்றாண்டு விழா ★

நிறைவாக

## முன்னோர், மூத்தோரைக் கௌரவித்தல்

யாழ்ப்பாணம் இந்து சமூகம் தனது முன்னோர், மூத்தோரைக் கௌரவிக்க இனிய விழாவொன்றினை எடுக்கின்றது.

காலம்: 1991-04-20 சனிக்கிழமை பி.ப. 3-00 மணி
இடம்: குமாரசுவாமி மண்டபம்

★ யாழ்: இந்துவின் வெள்ளிவிழாக் கால சேவை நாயகர்களை பொன்னாடை போர்த்து கௌரவித்தல்;
★ நூற்றாண்டு காலத்துள் சேவையிலிருந்த அதிபர்களின் உருவ ஓவியங்களைத் திரைநீக்கம் செய்தல்.

யாழ்: இந்துக் கல்லூரியின் வளர்ச்சியிலும், அதன் பெருமையிலும் அக்கறை கொண்டுள்ள ஒவ்வொருவரையும் இருகரம் கூப்பி அன்புடன் அழைக்கின்றோம்.

க.சி.குகதாசன், அதிபர்
ஆ. இராஜகோபால், செயலர், கலாசாரக் குழு

சுந்தரம் டிவகலாலா
சே. சிவராஜா,
இணைச்செயலர்;

[இ/5109]


# இவ்வருடம் அதிக பரப்பளவில் சிறு தானிய உற்பத்தி

## காசுப் பயிருக்கு இரண்டாம் இடம்

மானிப்பாய், ஏப்ரல் 19

யாழ். மாவட்டத்தில் கடந்த வருடத்தை விட இவ் வருடம் சிறுதானிய உற்பத்தியிலேயே விவசாயிகள் பெருமளவு நாட்டம் கொண்டுள்ளனர்.

தமிழீழ ஆய்வு நிறுவனம் வெளியிட்டுள்ள பயிர்ச் செய்கை விஸ்தீரணம் பற்றிய புள்ளிவிவர அறிக்கை இதனைத் தெரிவிக்கிறது.

இந்தப் புள்ளி விவர அறிக்கையின் பிரகாரம் பாசிப் பயறு, எள்ளு, தினை, உழுந்து, மரவள்ளி போன்ற தானியங்கள் அதிக அளவு நிலப்பரப்பில் செய்கை பண்ணப்பட்டுள்ளன.

அதேசமயம் மிளகாய், சின்னவெங்காயம் போன்ற காசுப் பயிர்களில் உற்பத்திப் பரப்பு குறைவடைந்துள்ளது.

சின்ன வெங்காயம் உற்பத்தி 2350 ஹெக்டேயரில் இருந்து 1473 ஹெக்டேயராகவும், மிளகாய் உற்பத்தி 1593 இல் இருந்து 1035 ஹெக்டேயராகவும் குறைவடைந்துள்ளன.

சிறுதானியங்களான பாசிப் பயறு 143 ஹெக்டேயரில் இருந்து 1217 ஆகவும், உழுந்து 11 ஹெக்டேயரில் இருந்து 129 ஆகவும், மரவள்ளி 416 ஹெக்டேயரில் இருந்து 819 ஆகவும் அதிகரித்துள்ளன.

எள்ளு, தினை இவ்வருடம் தனா 894, 413 ஹெக்டேயர்களில் விளைவிக்கப்பட்டுள்ளன. சிறுதானிய உற்பத்தியில் விவசாயிகள் 80 சதவீத வெற்றி கண்டுள்ளனர்.

யாழ். மாவட்ட விவசாயிகள் வழமையான தமது பணப்பயிர்ச் செய்கையை கைவிட்டு தன்னிறைவு பெறக் கூடிய சிறுதானிய உற்பத்தியில் கூடியளவு அக்கறை காட்டி வருவதை இப்புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. [இ-90]

## சிறுவன் பலி

யாழ்ப்பாணம், ஏப். 19

குளித்துக் கொண்டிருக்கையில் தவறி விழுந்ததாகக் கூறப்படும் 6 வயது சிறுவன் ஒருவன் கிணற்றில் மூழ்கி மரணமானான் என்று தெரிவிக்கப்படுகிறது.

யாழ். மடம் வீதியில் நேற்று நடந்த இந்தச் சம்பவத்தில் கனகலிங்கம் விஜிதரன் என்னும் சிறுவனே மரணமானார். [ஒ-15]

## பலாலி வந்த சிறில்

கொழும்பு, ஏப். 19

கடந்த சனிக்கிழமை பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்கா பலாலி, வவுனியா, மன்னார் பகுதிகளில் உள்ள இராணுவ முகாம்களுக்கு விஜயம் செய்து இராணுவ அதிகாரிகளையும் இராணுவத்தினரையும் சந்தித்து உரையாடினார் என்று கொழும்புச் செய்திகள் தெரிவித்தன. [ஒ-எ]

## படையினர் படகைத் திருப்பி விட்டனர்

நெடுந்தீவு, ஏப்ரல் 19

திங்கட்கிழமை [15-4-91] நெடுந்தீவில் இருந்து பிரயாணிகளுடன் குறிகாட்டுவான் நோக்கி வந்த குமுதினி படகு நயினாதீவுக்குச் சமீபமாக கடலில் வைத்து கடற்படையினரால் திருப்பி அனுப்பப்பட்டது.

குமுதினிப் படகு நெடுந்தீவில் இருந்து புறப்பட்டு வழமையான சோதனைக்காக நயினாதீவு சென்று கொண்டிருந்தபோது விசைப் படகில் வந்த கடற்படையினர் இடையில் வைத்துப் படகைத் திருப்பி அனுப்பி விட்டனர். இதனால் குமுதினிப்படகு நயினாதிவு குறிகாட்டுவான் துறைமுகங்களுக்குச் செல்லாது மீண்டும் திரும்பி நெடுந்தீவுக்குச் சென்றது. [இ-111]

## ஓய்வூதியருக்கு மண்ணெண்ணெய்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 19

ஓய்வூதியர்களுக்கு நியாய விலையில் மண்ணெண்ணெய் வழங்குவதற்கான நடவடிக்கைகளை நல்லூர் தொகுதி ஓய்வூதியர் நலன்புரிச் சங்கம் மேற்கொண்டுள்ளது.

மேலும் முதியோருக்கான விசேஷ மருந்து, உணவு, பால்மா வகைகளையும் சங்கம் நியாய விலையில் உறுப்பினருக்கு விநியோகிக்க இருப்பதாக சங்கத்தின் செயலாளர் தெரிவித்தார். [இ]

## இடம் பெயர்ந்த ஆசிரியருக்கு முழுச்சம்பளம்

கொழும்பு, ஏப்ரல் 19

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் இருந்து இடம் பெயர்ந்துள்ள சகல ஆசிரியர்களுக்கும் முழுச்சம்பளம் வழங்குவது என்று அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

இந்த முடிவு [illegible] அமுல்படுத் தப்படும் என்று தெரிவிக்கப் படுகிறது. [இ-எ]

## பூநகரியில் அன்னை பூபதி தினம்

பூநகரி, ஏப்ரல் 19

அன்னை பூபதி தின விழா இன்று 19 ஆம் திகதி பூநகரி மகாவித்தியாலயத்தில் நடைபெறும்.

இதற்கான ஒழுங்குகளை பூநகரிப் பகுதி கிராம அவையினர், வட்ட அவையினர் சேர்ந்து மேற்கொண்டுள்ளனர்.

விழாவில் போராட்டம் சம்பந்தமான நாடகங்கள், நடனங்கள், பட்டிமன்றம், கவியரங்கம் போன்ற நிகழ்ச்சிகள் இடம்பெற உள்ளன.

இன்றைய தினம் காலை தொடக்கம் மாலை வரையும் பூநகரி வாடியடியில் சந்தை மைதானத்தில் உண்ணாவிரதம் அனுஷ்டிக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மாலையில் அன்னதானம் வழங்குவதற்குரிய ஒழுங்குகளை பூநகரி வர்த்தக சங்கத்தினர் மேற்கொண்டுள்ளனர். [இ-135]


## S. L. P. S.
## இலங்கை அதிபர்கள் சேவை

தரம் 1, 2, 3, போட்டிப் பரீட்சைக்கான

## துரித பயிற்சி வகுப்புகள்

ஆரம்பம் 27 - 04 - 1991 8 - 30 மணி

பாடங்கள்: கல்விக் கொள்கையும், நிர்வாகமும், பொது அறிவு, கிரகித்தல்.

முழுக் கட்டணம்: 250/-

★ கல்விச் சேவை விரிவுரையாளர்கள்:
★ பாடக்குறிப்புகளும் மாதிரி வினா - விடைகளும் இலவசம்:
★ Limited Number in Each Class

## வணிக முகாமைத்துவக் கல்லூரி

(School of Business Administration)

16, 3 ஆம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம்.

[இ/4837]



நீராவியடி வண். வட கிழக்கு சனசமூக நிலைய நிதி உதவிக்காக

26 - 05 - 1991 யாழ். இந்து குமாரசாமி மண்டபத்தில்

## ★ கதகளி பரதநாட்டியம் ★
## ★ சங்கிலியன் ★

[சரித்திர நாடகம்]



சங்கிலியனாக இலங்கை வேந்தன் தோன்றும் காட்சி.

அன்பளிப்பு:
பவானி விலாஸ் கச்சான் அலுவா.

[16458]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

ஆரம்பசுகாதாரவழிகாட்டி. பேராசிரியர் த: இராமதாஸ் F. R. C. P., D. C. H. [குழந்தை வைத்தியத்துறை, மருத்துவபீடம்] எழுதியது. கல்லூரி, நூலகங்கள் மற்றும் முதலுதவிபோன்ற அனைத்து சுகாதாரப் பகுதியினர்களுக்கும் ஓர் அரிய புத்தகம். வெளியீடு: உதயன் வெளியீட்டகம், விற்பனை: பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். [இ-4822]

### புத்தக விற்பனை

English Practice Through Tamil Medium தமிழ் மூலம் ஆங்கிலப் பயிற்சி ஆண்டு—10, 11க்குரியது. ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர்கட்கு ஒரு அரிய கைநூல். ஆறு வருடங்களுக்குரிய G. C. E. O/L பயிற்சிகள் அடங்கியது. விலை ரூபா 20/- வியாபாரிகளுக்கு கழிவு வழங்கப்படும். ஆசிரியர் M. K. தில்லைமோகன், விற்பனை: பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். [இ/5934]

### தேவை

ஆங்கில மருந்துவகை விற்கும் மருந்துக்கடைக்கு பார்மசி அனுபவம் மிக்க ஒரு பெண் விற்பனையாளர் உடன் தேவை. நேரில் வரவும் திருமகள் மருந்தகம், [கல்வியங்காடு சந்தை அருகில் உள்ள பெற்றோல் செட் முன்பாக] கல்வியங்காடு சந்தை, கல்வியங்காடு. [16443]

---

[Rosin] றோசின், குருக்கோஸ் பாணி, நாட்டுக் குங்குலியம் தேவை, தொடர்பு கொள்ளவும்: அண்ணா தொழிலகம், இணுவில். [சி/4836]

---

பழைய சோதனைப் பேப்பர், கொப்பி, புத்தகங்கள், சிமெந்துப் பைக்கெட்டுகள் தேவை. தொடர்புகொள்ளவும்: அண்ணா தொழிலகம், இணுவில். [சி/4885]

### ஆசிரியை தேவை

பரமர் கல்விக் கழகத்தால் மே மாதம் 1ஆம் திகதி நீராவியடி கல்லூரி வீதியிலுள்ள நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் ஆரம்பிக்கவிருக்கும் 'நாவலர் பாலர்சோலை' என்னும் நவீன பாலர் பாடசாலைக்கு பயிற்சிபெற்ற இரு ஆசிரியைகள் தேவை. சான்றிதழ்களுடன் 21-4-91 ஞாயிற்றுக்கிழமை காலை 9-00 மணிக்கு மேற்குறிப்பிட்ட இடத்திற்கு வரவும். [16447]

### பிரத்தியேக வகுப்புக்கள்

ஆண்டு 6 தொடக்கம் க. பொ. த. [சாதாரணம்] வகுப்பு வரை கணித பாடம் வீடுகளுக்குச் சென்று கற்பிக்கப்படும். [O/L] கணிதம் இரண்டு மாதத்திற்குள் திறமையான முறையில் கற்பிக்கப்படும். விவரங்களுக்கு: காஇமாஸ்டர், 60/2, யா/இந்துக்கல்லூரி ஒழுங்கை, யாழ்ப்பாணம். [16456]

### விநாயகர் அருள் மில்

வாடிக்கையாளர்களின் நலன் கருதி மீண்டும் திறக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகிறோம். விலாசம்: விநாயகர் அருள் மில், இல. 8, பழம் றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம். [16461]

### ரைப்ரைட்டர்கள்

தட்டச்சு இயந்திரங்கள் சிறந்த முறையில் திருத்தவும், புதிய, பழைய ரைப்ரைட்டர்கள் வாங்கவும், விற்கவும் தமிழ், ஆங்கிலம் [Stencils] வேலைகள் செய்யவும் பியூடோ 89/17, மின்சார நிலைய வீதி, 8ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். [இ-4827]

### சோதிடம்

ஸ்ரீ மாவை வீரகத்திப் பிள்ளையாரின் திருவருளால் உங்களுக்குரிய எந்த சிக்கலான பிரச்சினையும் அருட்சக்தி மூலம் பதிலளிக்கப்படும். விவரங்களை நேரில் அல்லது முத்திரைக் கவர் அனுப்பிப் பெறலாம். ஸ்ரீ மாவை விநாயகர் சோதிடநிலையம். 146 [402], பருத்தித்துறை வீதி, அரசடிச் சந்தி, நல்லூர். [16464]

---

விவாககாலம் தொழில், கல்வி ஆகியவற்றிற்குரிய தடைகள், தடைக்குரிய நிவர்த்திகள் சரியாக கூறப்படும். தவறினால் பணம் திரும்பப்பெற உத்தரவாதம். ஸ்ரீ மாவை விநாயகர் சோதிட நிலையம், 146 [402], பருத்தித்துறை றோட், அரசடிச் சந்தி, நல்லூர். [16465]

### வணிக சிறுகுறிப்பு

வெளிவந்து விட்டது G. C. E. [A/L] வணிக சிறுகுறிப்பு [நடைமுறை விடயம்] எழுதியவர் தே: ஜெயராமன் விலை 15/- கிடைக்குமிடம்: பூபாலசிங்கம் புத்தகசாலை, C. C. A. யாழ்ப்பாணம். [சி-4831]

### தேவை

பலசரக்குக் கடைக்கு நல்ல அனுபவமுள்ள பில் கிளாக் விற்பனையாளர் தேவை. 21 - 4 - 1991 ஞாயிற்றுக்கிழமை நேரில் வரவும். 217/2, கடைச்சாமி ஒழுங்கை, யாழ்ப்பாணம். [16469]

### வாடகைக்குத் தேவை

யாழ்ப்பாணம் அல்லது மானிப்பாயில் வசதியான வீடு வாடகைக்கு தேவை. தனிக்கிணறு விரும்பத் தக்கது. தொடர்பு: சு. சிவசண்முகாநந்தக்குருக்கள் 146 [402] பருத்தித்துறை வீதி நல்லூர், யாழ்ப்பாணம். [16466]

### தவறிவிட்டது

நீல நிறக் காகப்பையுடன் சிட்டைகளும், இலக்கம் 362161690 V உடைய சுந்தையா சண்முகரத்தினத்தின் தேசிய அடையாள அட்டையும் மல்லாகம் சந்திக்கு அண்மையில் 17 - 04 - 1991 புதன் கிழமை மாலை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மல்லாகம்சந்தியிலுள்ள பிரபாகரன் தேனீர்ச் சாலையில் அல்லது உதயன் பணிமனையில் ஒப்படைக்கவும். [16470]

## ஆடுகளுக்கும் செயற்கை முறை சினைப்படுத்தல்

மானிப்பாய், ஏப்ரல் 19

பசுக்களை செயற்கைமுறையில் சினைப்படுத்துவது போல் ஆடுகளையும் செயற்கை முறையில் சினைப் படுத்தும் நடவடிக்கையை கால்நடை வைத்தியர்கள் மேற்கொண்டு வருகின்றனர். [இ-90]

### வயல் வரம்புகள்

வயல் வெளிகளில் உள்ள சகல வரம்புகளும் உடனடியாகத் துப்புரவு செய்யப்பட வேண்டும் என்று தொல்புரம் பிரதேச உற்பத்திக் குழு இணைப்பாளர் அறிவித்துள்ளார். [இ-12]

## உள்ளூர் உற்பத்திப் பொருள் கண்காட்சியும் விற்பனையும்

யாழ்ப்பாணம் ஏப்ரல் 19 உள்ளூர் உற்பத்திப் பொருள்களின் கண்காட்சியும், விற்பனையும் எதிர் வரும் 22-4 91 முதல் 25-4-91 வரை தாவடியில் நடைபெறவுள்ளன.

கோண்டாவில் இணுவில் தெங்கு-பனம் பொருள் கூட்டுறவுச் சங்கத்தின் மகளிர் குழு உறுப்பினர்களால் நடத்தப்படவுள்ள இக்கண்காட்சியில் கைப்பணிப் பயிற்சி நிலையமும், தொழிற்கூடமும் திறந்து வைக்கப்படும்.

முதற் கட்ட கைப்பணிப் பயிற்சியைப் பெறுவதற்கென 50 மகளிர் குழுவினர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இக்கண்காட்சியில் தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிப் பிரமுகர்கள் உட்பட, மற்றும் பலர் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளனர்.

இறுதி நாள் நிகழ்ச்சிகளில் மகளிர் குழுக்களுக்கிடையேயான போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும். அத்துடன் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும். [இ-த]

## 31 ஆம் நாள் நினைவுகள்

### 2 ஆம் லெப்டினன்ட்

### றஞ்சித்தாத்தா [குணபாலசிங்கம்]

| தாயின் மடியில்: | தாயக மீட்பில்: |
| --- | --- |
| 19 - 03 - 1964 | 19 - 03 - 1991 |

19 - 03 - 1991 அன்று சிலாவத்துறை இராணுவ முகாம் தகர்ப்பின்போது வீர மரணத்தைத் தழுவிக் கொண்ட எமது மகனுக்கும், ஏனைய போராளிகளுக்கும் எங்கள் கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

அன்னாரின் இறுதிக் கிரியைகளில் கலந்து எங்களுக்கு சகல உதவிகள் புரிந்த அனைவருக்கும், எமது பகுதி சிற்றூரவைக்கும் நன்றியைச் செலுத்துகின்றோம்.

குடும்பத்தினர்.

பேராலை,
பளை. [4027]

## நாலாம் ஆண்டு நினைவஞ்சலி



### அண்ணாமலை சந்திரசேகரம்


[பிரகாஷ் றைஸ்மில், உரிமையாளர்]
கட்டுவன், தெல்லிப்பளை.

மலர்வு: 30 - 05 - 1942 உதிர்வு: 02 - 05 -1987

ஆண்ட பொழுதெல்லாம்
அண்ணாமலை சந்திரசேகரனை
பூண்ட மனம் குளிர்ந்த
போதெல்லாம் உள்ளத்தில்
நீண்ட துயர் துடைத்தாய்
நின் புவியில் நீ வாழ்ந்து
மாண்ட நாளெலாம் தந்தை
மக்கள் மனை நிலைத் திருப்பாய்.

மனைவி, பிள்ளைகள்,
சகோதர, சகோதரிகள், மைத்துனர்கள்.

145, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம். [4024]



### அருளம்பலம் சுப்பிரமணியம்

[நிதானா ஸ்ரோர்ஸ் உரிமையாளர்]
புன்னாலைக் கட்டுவன், வடக்கு

மலர்வு: 07 - 02 - 1924 உதிர்வு: 02 - 05 - 1987

ஆண்டு நாலாகியும்
அருளம்பலம் சுப்பிரமணியன்
மாண்டு போன தென்ன
மருமக்கள் மக்கள் உள்ளம்
ஈண்டு உருவாகும்
எங்கள் குல தெய்வத்தின்
ஆண்ட திறம் சொல்ல
பூணுகிறோம் நின்நினைவை.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

[4025]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### நினைவு நாளில்

வீரத் தமிழ்த் தாய், தமிழ் மாதர் திலகம், தியாகச் சுடர், இலட்சிய தீபம் அன்னை பூபதியின் மூன்றாம் ஆண்டு நினைவு தினம் இன்றாகும்.

ஈழத் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தில் புதிய எழுச்சியையும், வேகத்தையும் விதைத்த அன்னைக்கு, இன்று, தமிழ் மண் பரந்து விரிந்துள்ள எல்லாப் பிரதேசங்களிலும் அஞ்சலி செலுத்தப்படுகிறது. அன்னையின் தளரா உறுதியும், இலட்சிய நோக்கும், விடுதலை உணர்வும், போராளியாக மாறும் மனப்பக்குவமும் தமிழர்கள் எல்லோருக்கும் சிறந்த முன்னுதாரணங்கள். கடைப்பிடித்து நடக்க வேண்டிய முக்கிய கடமைகள்.

இலங்கை இராணுவமாயினும் சரி, இந்திய இராணுவமாயினும் சரி, அவற்றின் அடக்குமுறைகளையும், அடாவடித்தனங்களையும் ஆக்கிரமிப்பையும் எதிர்த்துப் போராடுவதற்கு [ஆயுதப் போராட்டத்தால் மட்டுமன்றி சாத்வீகப் போராட்டத்தாலும்] தமிழ் மக்கள் பின்னிற்கமாட்டார்கள். தமது விடுதலைப் போராட்டத்தை எந்த வகையிலும், எந்த வழியிலும் நசுக்க, எவரையும் சகித்துக் கொள்ளமாட்டார்கள், பொறுத்துக் கொள்ளமாட்டார்கள் தமிழர்கள் என்பதை உலகுக்கு மிகமிக இக்கட்டான காலத்தில் எடுத்துக் காட்டியவர் அன்னை பூபதி.

ஈழத் தமிழ்ப் பெண்கள் உரிமைப் போராட்டத்தில் இருந்து விலகி நிற்பவர்கள் அல்லர். ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாகப் போராடுவார்கள் என்பதை அன்றே உலகுக்கு உணர்த்தியவர் அன்னை பூபதி.

அன்னை பூபதி ஓர் அரசியல்வாதி அல்லர். பதவி மற்றும் அற்ப ஆசைகள் அவரைச் சூழ்ந்து கொண்டதில்லை. அவர் வயதான ஒரு குடும்பப் பெண்ணாக வாழ்ந்தவர்.

அநீதிகளை, அக்கிரமங்களை எதிர்த்துப் போராட வேண்டும் என்ற மனக்கிளர்ச்சியே அவரை ஒரு வரலாற்று நாயகியாக்கியது. தியாக தீபமாக உருமாற்றியது.

தாமும் தமிழ்ச் சமுதாயத்தின் ஓர் அங்கம். அதன் விடிவுக்கும், சுபீட்சத்துக்கும், சுதந்திரத்துக்கும் தமது பங்களிப்பும் தேவை என்பதை அவர் உணர்ந்தார். அதன் விளைவாக அவர் தாமும் ஒரு போராளியாக மாறினார்.

தமிழர் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதத்தில், ஒவ்வொரு வகையால், விடுதலைப் போராட்டத்தில் பங்காளியாக வேண்டும் என்பதை அவர் உணர்த்திச் சென்றார். அதனை மறந்து போகும் காலம் இன்னும் வரவில்லை. நினைவில் வைத்து மற்றவர்களும் பின்பற்ற வேண்டிய காலமே இப்போதும் நீடிக்கிறது.

ஆகவே அன்னை பூபதியின் நினைவு தினமும், அவருக்குச் செலுத்தப்படும் அஞ்சலியும் உரிமைப் போராட்டத்தில் தமிழர்கள் ஒவ்வொருவருக்கும் உள்ள பங்கினை இடித்துரைக்கும் நிகழ்ச்சிகளாக அமைவது அவசியம்.

அன்னை பூபதியிடம் மூகிழ்த்த சுதந்திர உணர்வும், அடக்குமுறை, ஆக்கிரமிப்பை உடைத்து எறிய வேண்டும் என்ற இலட்சிய வேட்கையும், இடர் எது வரினும் எடுத்த கருமம் கைவிடலாகாது என்ற மன உறுதியும், இளைய சமுதாயத்தினருக்கு மட்டுமன்றி, எல்லோருக்கும் அவசியம் என்பதை இவ்வருடத்திய பூபதி நினைவு நாள் மக்கள் மனங்களில் நிலை நிறுத்தட்டும்.

# தமிழர் மனங்களில் எழுச்சியும், வேகமும் உருவாக வழிகோலிய அன்னையின் போராட்டம்

இந்திய அரசு தமிழீழ மண்ணை ஆக்கிரமித்து, இங்கு தோற்றம் பெற்று உயர்ந்த நிலையில் இருந்த விடுதலைப் போராட்டத்தை வஞ்சகமாக நசுக்க முயன்று கொண்டிருந்த நேரம், அழிவுக்கும் - இழப்புகளுக்கும் நடுவே தமிழரின் சிறிய - நெஞ்சுரம் மிக்க தேசியபடை ஒரு கடுமையான எதிர்ப்பைக் காட்டியது.

**இந்திய அரசின் வேஷம்**

இந்த மண்ணில் பேரழிவை மிகக் கொடூரமான அடக்குமுறை - கட்டவிழ்த்து விட்டிருந்த இந்திய அரசு வெளி உலகத்திற்கு ஒரு வேஷம் போட முனைந்தது. இங்கு நடக்கும் விடுதலைப் போராட்டத்தை, ஓர் இயக்கத் தலைமையின் பதவி ஆசை என்றும் தமிழீழ மக்கள் இந்திய ஆக்கிரமிப்பை பெரிதும் விரும்புகிறார்கள் எனவும் பிரச்சாரத்தை முடுக்கிவிட்டார்கள்.

தமிழீழத்தின் வீதிகளிலும், கிராமங்களிலும் மக்கள் கிளர்ந்தெழுந்த எழுச்சிகளெல்லாம் ஆயுதங்களால் அடக்கப்பட்டன. இந்திய அரசுக்கெதிரான மக்கள் போராட்டங்களுக்குத் தலைமை வகித்தவர்கள் வீடுகளிலும், வீதிகளிலும் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார்கள். தமிழீழத்தில் ஆயுதம் தரித்த பேயாட்சி ஒன்று நடந்து கொண்டிருந்தது.

**அன்னையர் முன்னணியினரின் போராட்டம்**

இந்நிலையில் தான் தமிழீழத்தின் தெற்குப் பகுதியில் இருந்து அன்னையர் முன்னணியினர் பெரும் போராட்டம் ஒன்றை ஆரம்பித்தனர். அவர்கள் இந்திய அரசுக்கு தமிழ்த் தேசத்தின் மீதான யுத்தத்தைக் கைவிட்டு - அவர்களின் தேசிய விடுதலைப் படையான புலிகளுடன் பேச்சுவார்த்தையை நடத்தும்படி தென் தமிழீழ மக்களின் சார்பாகக் குரல் கொடுத்தனர்.

அன்னையரின் சாட்சியாக, தென் தமிழீழ மக்களின் இதய உணர்வுகளைப் பிரதிபலிக்கும் வடிவமாக அன்னை பூபதி சாகும்வரையான உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தார்.

சிங்களப் பேரினவாதத்தால் உண்மையிலேயே பெரிதும் நாசம் செய்யப்பட்டவர்கள் தென் தமிழீழத் தமிழர்கள் தான். வீதியில் வரும் அதிரடிப்படைக்கும், கொடிய மனித மிருகங்களுக்கும் தமது உயிர்களை அதிகம் இரை கொடுத்தவர்கள் இவர்கள் தான். விடுதலையின் - சுதந்திரத்தின் - தேவையை, பெறுமதியை அதிகம் தெரிந்த தென் தமிழீழத்தவர்கள் விடுதலைப் போராட்டத்தைக் காப்பாற்ற நினைத்தது ஒன்றும் அதிசயமில்லை.

அந்த மண்ணுக்குரிய அவலமும், துயரமும் நிறைந்த வாழ்வு எவரையுமே விலகிச் செல்லவில்லை. அந்த வகையில் அன்னை பூபதியையும் அந்த மண்ணின் சம்பவங்கள் பாதித்திருந்தன! அவரின் இரு ஆண் பிள்ளைகள் சிங்கள இராணுவத்தினரின் வெறித்தனத்திற்கு பலியானார்கள். மகனொருவர் கைதுசெய்யப்பட்டு நான்கு வருடங்கள் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார்.

இயல்பாகவே விடுதலை உணர்வுடைய அன்னை பூபதியை இச்சம்பவங்கள் மேலும் உறுதியுடைய ஒரு பெண்மணியாக மாற்றியது. இந்தியாவின் வரவும், நடவடிக்கைகளும், விடுதலைப் போராட்டத்தை அழிக்க நின்றபோது அன்னை பூபதி போராடப் புகுந்தார்.

**அன்னையின் நெஞ்சுரம்**

அன்னையின் உண்ணாவிரதப் போர் உலக அரங்கில் எத்தகைய மாற்றங்களை ஏற்படுத்தும் என்பதை உணர்ந்த இந்திய அரசும், இந்தியப் படையும் அன்னையின் போராட்டத்தை முறியடிப்பதற்காக அனைத்து வழிகளையும் நாடின.

உணவை மறுத்து அன்னை ஒரு போராட்டத்தைத் தொடங்கிய பத்து நாட்களின்பின் அன்னையிடம் வந்த இந்திய அதிகாரிகள், 'நாங்கள் தமிழர்களுக்குச் சார்பாகத்தான் நடக்கின்றோம். யுத்தத்தை நிறுத்தி விடுகின்றோம். நீங்கள் போராட்டத்தை நிறுத்திவிடுங்கள்'.

**- காலாவதானி -**

எனப் பொய்யான நம்பிக்கைகளைத் தந்தனர்.

உடலில் சக்தி அற்று இயங்க முடியாத அந்த நிலையிலும் ''யுத்தத்தை நிறுத்திய பின்னர், போராட்டத்தை நான் கைவிடுகின்றேன்'' என்று அன்னை உறுதியாகக் கூறினார்.

அன்னாரின் உறுதியை, அதனால் மக்களிடையே எழுந்த எழுச்சியைக் கண்ட இந்திய இராணுவ அதிகாரிகளுக்கு அச்சம் உண்டானது. மோசமான நடவடிக்கைகளில் இறங்கினர்.

உண்ணாவிரதப் போராட்டத்தில் கலந்துகொள்ள வந்த ஆண்களும் பெண்களும் வழிகளில் வைத்து கொடுமையான சித்திரவதைக்குள்ளானார்கள். சிலர் இழுத்துச் செல்லப்பட்டுக் காணாமற் போகச் செய்யப்பட்டனர். உண்ணாவிரத மேடையைச் சுற்றி, படையினரை நிறுத்தி தமது வழமையான அராஜக நடவடிக்கைகளைக் கட்டவிழ்த்து விட்டனர்.

நெஞ்சுரம்மிக்க அன்னை பூபதியின்முன் இவையனைத்தும் பொய்த்துப் போயின. அன்னை பூபதியின் வார்த்தைகள் தமிழீழத்தை — தமிழீழத்தின் குழந்தைகளை — தூங்க விடவில்லை. ஊத ஊத கனன்று, எரியும் விறகு போன்று, விடுதலைத் தீ எங்கும் எழுந்து பரவியது. தமிழீழத்தை மட்டுமல்ல, இந்திய மக்களை, உலக மக்களை அன்னையின் போர் விழிக்கச் செய்தது. அதன் விளைவாக இந்திய அரசைப் பார்த்து இந்திய [illegible]

''இந்திய அரசே இதற்காகவா நீ. அங்கு சென்றாய்? உன் பாதகச் செயல்களை திருத்த மாட்டாயா'' - என்று, இந்திய நாடாளுமன்றத்திலேயே நேர்மை மிக்க சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் கேட்டனர். 'அந்த மண்ணின் விடுதலைப் போராட்டத்தை மதியுங்கள். இந்தியப் படையை திரும்ப அழைத்து விடுங்கள்' என்றும் அவர்கள் கேட்டனர்.

**போராட்டத்தின் வெற்றி**

அன்னை பூபதியின் போராட்டத்தின் வெற்றியே அதுதான். இந்திய அரசின் - படைகளின் - நோக்கத்தை உலகிற்கு தெரியப்படுத்தியதே அன்னையின் வெற்றியாகும் அத்தோடு அன்னையின் போராட்ட காலம் தமிழீழத்தில், தமிழர் மனங்களில் ஓர் எழுச்சியையும், தமிழர் மனங்களில் உறங்காத வேகத்தையும் ஏற்படுத்தியது.

இளைஞர் அமைப்புகள், விவசாயிகள் சம்மேளனங்கள், தொழிற்சங்கங்கள், மாதர் சங்கங்கள், பாடசாலை மாணவர்கள் என அனைத்து மக்களும் அன்னை பூபதிக்கு ஆதரவாக ஊர்வலங்களையும் - கூட்டங்களையும் நிகழ்த்தினார்கள்.

அன்னையின் கோரிக்கைகளை நிறைவேற்றும்படி, இந்திய அரசிற்கு மகஜர்களை அனுப்பினார்கள். இந்திய அரசு காணாமலிருந்தது. இந்த நிலையில் தான், உண்ணாவிரதப் போராட்டத்தின் முப்பத்தொராவது நாள், அன்னை பூபதி வீர மரணம் எய்தினார்.

**மக்களின் எழுச்சி**

அந்தச் செய்தி இந்த மண் கேட்டுத் திகைத்து நின்றது. அன்னையைப் பார்க்க, அன்னைக்கு அஞ்சலி செலுத்த ஆயிரமாயிரமாக மக்கள் அணிதிரளத் தொடங்கினார்கள்.

அன்னையின் உடல் இருக்கும் ஒவ்வொரு கணமும், விடுதலைக்கு எழுச்சியை விதைக்கும் என்று இந்தியர்கள் அஞ்சினர். மீண்டும் படை அதிகாரிகள் ஏராளமான இராணுவத்தினருடன் வந்தனர். ''நாட்டின் அமைதிகெடும் - அன்னையின் உடலை நாம் எடுத்துச் செல்ல வேண்டும் என்றார்கள். அன்னையை சூழ்ந்துநின்ற மக்கள் அவர்களைச் சூழ்ந்தனர். அன்னையரின் சுவசம் ஒன்று பூபதி அம்மாவின் புகழுடலை மறைத்து நின்றது.

''அன்னையின் உடலைக் கொண்டு செல்வதாக இருந்தால், எம்மில் பலர் சடலமாக வேண்டும்'' அன்னையரின் வார்த்தைகளைக் கேட்ட, சுற்றி நின்ற மக்களின் விழிகளின் கோபத்தைப் பார்த்த இந்தியர்கள் பின் வாங்கிச் செல்கிறார்கள்.

மூன்று நாட்களாக அன்னையின் உடல் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. சுற்றி நின்ற இந்தியப் படையினரின் கண்களிற்குள் தப்பி, விடுதலைப் புலிகளும் ஒரு மலர் வளையத்தை அன்னையின் காலடியில் சமர்ப்பித்திருந்தனர். 'விடுதலைக்குத் தன்னுயிர் தந்த எங்கள் அன்னைக்கு வீரவணக்கங்கள்'' அழகான எழுத்துக்களில் அந்த மலர்வளையம் அன்னைக்கு அஞ்சலி செலுத்தி நின்றது.

22 - 04 - 1988 அன்று மட்டக்களப்பு மாவட்டம் என்றுமே காணாத மாதிரி அன்னையின் உடலைச் சுமந்தபடி மக்கள் ஊர்வலமாக அணிவகுத்தார்கள். அந்த ஊர்வலமும், அதில் கலந்து கொண்ட பெரும் எண்ணிக்கையான மக்களும், அவர்களின் உணர்வுகளுமே தென் தமிழீழத்தின் விடுதலை உணர்வுக்கும் அங்கு விடுதலைப் புலிகளின் வளர்ச்சி நிலைக்கும் எடுத்துக் காட்டுகளாக நின்றன; நிற்கின்றன. ✶



---

# தி. மு. க. - ஜனதா தள் முரண்பாடு நீங்கும்?

## கலைஞருடன் சிங் தொடர்பு

சென்னை, ஏப். 19

தி. மு. க. வுக்கும் ஜனதா தள் கட்சிக்கும் இடையிலான முரண்பாடுகள் நீங்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

திரு. வி. பி. சிங், கலைஞர் கருணாநிதியுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசியுள்ளார்.

நாடாளுமன்ற மற்றும் சட்டசபைத் தேர்தல் தொடர்பான தொகுதி உடன்பாட்டில் ஏற்பட்டுள்ள கருத்து வேறுபாடு குறித்து இருவரும் பேசிக்கொண்டார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

செய்தியாளர்களிடம் திரு. கருணாநிதி கருத்து வெளியிடுகையில் ''தொகுதி உடன்பாடு குறித்து கருத்து வேற்றுமை சுமுகமாகத் தீர்க்கப்படலாம்'' என்று நம்பிக்கை தெரிவித்தார்-

[ஒ-எ]

# பம்பாயில் வைஜயந்தி!

சென்னை, ஏப். 19

கலைக்கப்பட்ட இந்திய லோகசபையில் தென்சென்னைத் தொகுதி எம். பியாக இருந்த முன்னாள் நடிகை வைஜயந்தி மாலாபாலியை இந்திரா காங்கிரஸ் தனது வேட்பாளராக பம்பாயில் ஒரு தொகுதியில் நிறுத்தும் என்று தெரியவருகிறது.

தென் சென்னைத் தொகுதியை காங்கிரஸ் இம்முறை அ. தி. மு. கவுக்கு விட்டுக்கொடுத்து விட்டது தெரிந்ததே. [உ-எ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிவாரணக் கொடுப்பனவு: ஸ்ரான்லி வீதி வங்கியில்

யாழ்ப்பாணம், ஏப். 19

யாழ். ஸ்ரான்லி வீதி இலங்கை வங்கிக் கிளையில் நாளை சனிக்கிழமை நிவாரணக் கொடுப்பனவுகள் வழங்கப்பட உள்ளன.

முன்னர் பெயர் குறிப்பிடப்பட்டு, கொடுப்பனவைப் பெறத் தவறியோருக்கு, அன்று மீளக் குடியமர்தல் நிவாரணம் ஆயிரம் ரூபாவும் முன்னர் பெறாதோருக்கு 2 ஆயிரம் ரூபாவும், உற்பத்தித் திறன் வாய்ந்த தொழில் முயற்சிக்கான நன்கொடைப் பணம் 4 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படும்.

நிவாரணம் பெறத் தகுதியுடையோர் தத்தமது பகுதி கிராம சேவையாளருடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

அரியாலை, வண்ணார்பண்ணை, கந்தர்மடம், நல்லூர், திருநெல்வேலி, கொக்குவில், கோண்டாவில் பகுதிகளைச் சேர்ந்த கிராம சேவையாளர் பிரிவுகளுக்கே கொடுப்பனவு வழங்கப்பட இருக்கிறது. [ஒ]

## தி.மு.க. - ஜனதா தள் உறவு சீர் செய்யப்பட்டுவிட்டது

தமிழகத்தில் நடைபெறவுள்ள லோகசபை மற்றும் சட்டசபைத் தேர்தல்கள் தொடர்பாக தி.மு.க. விற்கும் ஜனதா தள் கட்சிக்கும் இடையே தொகுதி உடன்பாடு ஏற்பட்டு விட்டதாக நேற்று அறிவிக்கப்பட்டது.

ஜனதா தள் கட்சி தமிழகத்தில் 5 லோகசபைத் தொகுதிகளிலும் 15 சட்டசபைத் தொகுதிகளிலும் போட்டியிடும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இத்தகவலை தி.மு.க. பேச்சாளர் ஒருவர் சொன்னார். [உ-எ]

[முன்னர் வந்த செய்தி 5 ஆம் பக்கத்தில்]

## வீரப்பன், எஸ். டி. எஸ். இருவருக்கும் இடமில்லை

சென்னை, ஏப். 19

எதிர்வரும் தமிழக சட்டசபைத் தேர்தலில் அ.தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர்களான திரு எஸ்.டி. சோமசுந்தரமும் திரு. இராம. வீரப்பனும் போட்டியிடவில்லை.

அ.தி.மு.க. வேட்பாளர்களின் இறுதிப் பட்டியல் செயலாளர் ஜெயலலிதாவால் வெளியிடப்பட்டது.

எதற்காக அவர்கள் இருவருக்கும் வேட்பாளர் நியமனம் வழங்கப்படவில்லை என்று செய்தியாளர்கள் கேட்டதற்கு—

''தேர்தல் பிரசாரத்துக்கு அவர்களது சேவையை முழுமையாகப் பயன்படுத்துவதற்காகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது— என்று செல்வி ஜெயலலிதா பதிலளித்தார். [உ-எ]

### பதவியில் நிக்ஸன் இருந்திருந்தால்

## சதாமை கொல்லும்படி உத்தரவிட்டு இருப்பாராம்!

''நான் ஜனாதிபதியாக இன்று இருந்து இருப்பின் ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசேனைக் கொல்லும்படி உத்தரவிட்டிருப்பேன்.''

78 வயதான முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி றிச்சர்ட் நிக்ஸன் தொலைக்காட்சி பேட்டி ஒன்றில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

''சதாம் ஹுசேன் சர்வதேச ரீதியில் தொல்லை தரும் நபராக இருக்கிறார். இன்னும் ஐந்து ஆண்டுகளுக்கு சதாம் பதவியில் இருப்பாரானால்'' பிராந்தியத்தின் சமாதானத்திற்கும் ஸ்திரத்தன்மைக்கும் அச்சுறுத்தலாக அது அமையும்''— என்றும் திரு. நிக்ஸன் சொன்னார்.

ஒப்பந்தக் கொலைகளை இன்னும் சி.ஐ.ஏ. உளவு நிறுவனம் செய்து வருவதானால், அதற்கான பொறுப்பை ஒப்படைப்பதற்கும் தாம் ஆதரவாக இருப்பதாகவும் திரு. நிக்ஸன் சொன்னார். [ஒ-எ]

### குர்டிஷ் மக்களுக்கு பாதுகாப்பு:

## ஈராக்கின் வட பகுதிக்கு 10,000 அமெ. படையினர்!

குர்டிஷ் மக்களுக்குப் பாதுகாப்பு வழங்குவதற்காக பத்தாயிரம் அமெரிக்கப் படையினர் நேற்று ஈராக்கின் வடக்குப் பகுதிக்கு அனுப்பப்பட்டனர்.

அங்கு அவர்கள் ஆறு பாரிய அகதி முகாம்களை நிறுவும் வேலையை உடனடியாக ஆரம்பிப்பர். பிரான்ஸும் பிரிட்டனும் தலா மூவாயிரம் படையினரை இப்பணியில் ஈடுபடுத்தப் போவதாக அறிவித்துள்ளன.

ஒவ்வொரு முகாமிலும் 60 ஆயிரம் அகதிகள் தங்க வைக்கப்படுவர். முகாம்களை அமைக்கும் பணி இம்மாத இறுதியில் முடிவடைந்துவிடும் என்றும் அதன் பின்னரே அங்கு அகதிகள் அனுமதிக்கப்படுவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குர்டிஷ் அகதிகளுக்கு பாதுகாப்பையும் இப்படையினர் வழங்குவர் என்று அமெரிக்கா அறிவித்துள்ளது.

அகதிகளைப் பராமரிக்கும் பொறுப்பை சர்வதேச நிவாரண நிறுவனங்கள் ஏற்றுக்கொள்ளும். [ஒ-எ]

## மரணம்

யாழ்ப்பாணம், ஏப். 19

கிளிநொச்சியில் அண்மையில் ட்ராக்டரில் இருந்து விழுந்து காயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருந்த தாவடி வாசி நேற்று மரணமானார்.

கொழும்பு செல்ல முயன்று பயணம் செய்ய முடியாத நிலையில் திரும்பி வந்தபோதே இந்த விபத்து நடந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

துரையப்பா இந்திரன் [35 வயது] என்பவரே இறந்தவர் ஆவார். [ஒ-15]

## இன்று கொடியேற்றம்

யாழ்ப்பாணம், ஏப். 19

நல்லூர் கைலாச பிள்ளையார் ஆலய விநாயகருக்கான வருடாந்த மகோற்சவம் இன்று காலை நடக்கும் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

இம் மாதம் 27 ஆம் திகதி சனிக்கிழமை தேர்த் திருவிழாவும், 28 ஆம் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

## விடைத்தாள்கள் திருத்தப்பட்டு வருகின்றன

அன்னை பூபதி ஞாபகார்த்தமாக நடந்த பொது அறிவுப் பரீட்சை முடிவுகள் குறிப்பிட்டபடி இன்று வெளிவரமாட்டா என அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்பார்த்ததிலும் பார்க்க அதிகமான மாணவர்கள் பரீட்சையில் பங்குபற்றியதால், விடைத்தாள்கள் திருத்த வேலைகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாக விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கம் தெரிவித்தது. [ஒ]

### 2 இடங்களில்..,

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பட்டது.

பெரியார் மாவட்டத்தில் உள்ள காங்கேயம் தொகுதியில் செல்வி ஜெயலலிதா போட்டியிடுவார் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டது. தெரிந்ததே.

''ஏன் இரண்டு தொகுதிகளில் போட்டியிட முடிவு செய்துள்ளீர்கள்?''— என்று செய்தியாளர்கள் கேட்டதற்கு.

''ஒரு தொகுதியில் தவிர்க்க முடியாத காரணத்தினால் தேர்தல் நிறுத்தப்பட்டால், இன்னொரு தொகுதியில் போட்டியிடுவது உதவி செய்யும்'' என்று செல்வி ஜெயலலிதா சொன்னார். [உ-எ]

### மன்னாரில்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

படையினருக்கு உதவியாக அவ்ரோ விமானம் ஒன்றும், மூன்று பொம்மர்களும் குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தின.

மீண்டும் அடுத்த நாள்— புதன்கிழமையன்று— காலை 6.30 மணியளவில் ஒரு சீனச் சகடை விமானம் மற்றும் அவ்ரோ விமானம், ஹெலிகொப்டர் ஆகியனவற்றின் உதவியுடன் படையினர் முன்னேற முயன்றனர்.

புலிகள் விடாது தாக்குதல் நடத்தியதை அடுத்து படையினர் முன்னேற முடியாது அப்பகுதியிலேயே நிலை கொண்டிருந்தனர்.

திரும்பவும் நண்பகல் 11 மணி அளவில் வந்த மூன்று பொம்மர்கள் இப்பகுதியில் சுமார் நாற்பது குண்டுகள் வரை வீசிச்சென்றன. மாலை 5 மணியளவில் சீனச்சகடை விமானம் ஒன்று எட்டுக் குண்டுகளை வீசியது.

மீண்டும் புதன் மாலையில் வந்த அவ்ரோ விமானம் நான்கு குண்டுகளை இப்பகுதியில் வீசியது.

இந்த மோதல்களில் படையினருக்கு ஏற்பட்ட சேதங்கள் குறித்து தகவல்கள் கிடைக்கவில்லை.

விடுதலைப் புலிகள் தரப்பில் செவ்வாயன்று இடம்பெற்ற மோதலில் 2 ஆவது லெப்டினன்ட் ரைகன், வீரவேங்கை இளங்கோ ஆகியோரும்—

புதனன்று இடம்பெற்ற மோதலில் ஜீவா [மட்டக்களப்பு], நாயகன் [வவுனியா] ஆகிய இரு போராளிகளும் வீரமரணமடைந்தனர்.

இதேசமயம்—

கடந்த செவ்வாயன்று நானாட்டானிலிருந்து படையினர் முன்னேற முயன்ற போதும் அப்பகுதியில் மோதல் இடம்பெற்றது. [உ-15]

## பஞ்சாப், அஸாமிலும் ஜூனில் தேர்தல் நடக்கும்

புதுடில்லி, ஏப். 19

பஞ்சாப், அஸாம் மாநிலங்களில் அனேகமாக ஜூன் இரண்டாம் வாரத்தில் நாடாளுமன்ற மற்றும் சட்டமன்றத் தேர்தல்கள் நடத்தப்படும்.

தீவிரவாத நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்டிருக்கும் இந்த இரு பிரதேசங்களிலும் தேர்தல் நடத்துவது என்ற சந்திரசேகர் அமைச்சரவையின் முடிவை மறுபரிசீலனை செய்யுமாறு ஜனாதிபதி வெங்கட்ராமன் கேட்டிருந்தார்.

அந்த முடிவை மறுபரிசீலனை செய்த அமைச்சரவை இரு மாநிலங்களிலும் தேர்தல் நடத்தப்படவேண்டும் என்று மீண்டும் சிபாரிசு செய்தது.

இதனையடுத்து ஜம்மு காஷ்மீர் தவிர்ந்த இந்தியாவின் முழு இடங்களிலும் [அஸாம், பஞ்சாப் உட்பட] தேர்தல் நடத்துவது என்ற அறிவிப்பை ஜனாதிபதி ஆர். வெங்கட்ராமன் நேற்றிரவு வெளியிடுவது என்று முடிவு செய்தார். [உ]

## ஹெலி சூடு ஒரு புறம்! பாம்பின் சீறல் மறுபுறம்!!

தென்மராட்சி, ஏப். 19

சாவகச்சேரி, சங்கத்தானையில் நேற்று முன்தினம் இரவு ஹெலித் தாக்குதல் நடந்தது.

இதனால் இப்பகுதி மக்கள் பதற்றம் அடைந்தனர். சிலர் பதுங்குகுழிகளுக்குள் சென்று பாதுகாப்புத் தேடிக் கொண்டனர்.

இவ்வாறு பாதுகாப்புத் தேடி பதுங்குகுழிக்குள் செல்ல முயன்ற ஒரு குடும்பத்தினரை உள்ளே இருந்து வந்த ''உஷ் உஷ்'' என்ற சீறும் ஒலி பயமுறுத்தியது. இதனால் ஹெலி வேட்டுக்களைத் தீர்த்துக் கொண்டிருந்தபோதும், சம்பந்தப்பட்ட குடும்பத்தினர் அச்சத்தினால் பதுங்கு குழிக்கு உள்ளே செல்லவில்லை.

சில நிமிடங்களில் ஹெலி சென்றுவிட்டது.

பதுங்கு குழியை கவனித்துப் பார்த்தபோது, உள்ளே 8 அடி நீளமான கொடிய புடையன் பாம்பு திரண்டு புடைத்துக் காணப்பட்டது. [ஒ-117]

## முழங்காவிலில் அன்னை பூபதி நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், ஏப். 19

அன்னை பூபதியின் ஞாபகார்த்தமாக முழங்காவில் கொத்தணிப் பாடசாலைகளுக்கு இடையேயான கலை நிகழ்ச்சிகளும் அஞ்சலிக் கூட்டமும் இன்று மாவீரர் கலையரங்கில் நடைபெறவுள்ளன. [ஒ-5]

### புதிய ..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பட்டுள்ளது.

இலங்கைப் போராளிகளின் தவறான நடவடிக்கைகளினால் அவர்கள் தமிழக மக்களின் ஆதரவையும், இலங்கைத் தமிழர்களின் ஆதரவையும் இந்திய அரசின் ஒத்துழைப்பையும் இழந்துவிட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [உ-எ]

## நாடாளுமன்றை பகிஷ்கரிக்க கோரிக்கை

கொழும்பு, ஏப்ரல் 19

இன்று நடைபெறும் நாடாளுமன்றப் புதிய கூட்டத் தொடர் ஆரம்ப விழாவைப் பகிஷ்கரிக்கும்படி ஏனைய எதிர்க் கட்சிகளுக்கு நவசமசமாஜக் கட்சி வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஆரம்ப விழாவைப் பகிஷ்கரிக்கப்போவதாக சுதந்திரக் கட்சி ஏற்கனவே முடிவு செய்துவிட்டது. [ஒ-எ]

## மரண அறிவித்தல்கள்

### திரு. க. குலசிங்கம்

அல்வாய் வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட கந்தையா குலசிங்கம் அவர்கள் 17-4-1991 புதன்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் திருமதி இராசநாயகம் இன்பமதி, நாவேந்தன் [சுவிஸ்], திலகேந்திரன் [அகிலன் - லண்டன்] ஆகியோரின் அன்புத் தந்தையாரும், மு. இராசநாயகம் [ஆசிரியர், தேவரையாளி இந்துக் கல்லூரி, கரவெட்டி], திருமதி நாவேந்தன் ஜெயசோதி [சுவிஸ்] ஆகியோரின் மாமனாரும், பிரசன்னா, ஜனனி, பிரசாந் ஆகியோரின் அன்புப் பேரனும், கதிரவேல் [பவளம்], பாலகிருஷ்ணன், காலம்சென்றவர்களான மா. செல்லம்மா, மா. தங்கம்மா, சி. பொன்னம்மா ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரது இறுதிச் சடங்குகள் 18-4-1991 அன்று அல்வாயில் நடைபெற்றன. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகிறோம்.

தகவல்:
மு. இராசநாயகம் (அனாதரட்சகன்)
[மருகன்]

[16502]

### திரு. சி. கணபதிப்பிள்ளை [சாத்திரியார்]

திரு. சி. கணபதிப்பிள்ளை [சாத்திரியார்] காலமாகிவிட்டார்.

இவர் காலம்சென்ற நல்லம்மாவின் அன்புக் கணவரும், தில்லைநாதன், திருக்கமலநாதன், திருரவீந்திரநாதன், ராணி, ரூபி ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார். அன்னாரின் பூதவுடல் இன்று [19-4-1991] வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் செம்மணி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்:
மார்க்கண்டு

6/21, மூத்தவிநாயகர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

[16503]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 19-04-1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org